இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 28-12-2024

# மகத்தான மன்மோகன்!



இரண்டு முறை இந்தியப் பிரதமராக இருந்தவரும் - தலைசிறந்த பொருளாதார மேதையுமான மன்மோகன் சிங் நேற்றைய தினம் (டிசம்பர் 26) மறைந்துவிட்டார். இந்திய அரசியலில் மகத்தான மனிதர் மறைந்துவிட்டார். அவருடைய சாதனைகள் என்பவை மகத்தானவை ஆகும்.

**அவர் அரசியல்வாதி அல்ல. கல்விதான் அவரை இவ்வளவு பெரிய உயரத்துக்கு அழைத்துச் சென்றது. 'இந்தியாவின் ஏற்றுமதி மற்றும் தன்னிறைவான வளர்ச்சி வாய்ப்புகள்' என்ற தலைப்பில் புத்தகம் எழுதினார். இது 1964 ஆம் ஆண்டு வெளியானது. டெல்லி பொருளாதாரப் பள்ளியில் வேலைக்கு வந்தார். 1971 ஆம் ஆண்டு இந்திய அரசின் வர்த்தக அமைச்சகத்தின் பொருளாதார ஆலோசகராக அவர் நியமிக்கப்பட்டார். அடுத்த ஆண்டே நிதி அமைச்சக ஆலோசகர் ஆனார். நிதி அமைச்சகச் செயலாளர், திட்டக்குழுவின் துணைத் தலைவர், இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர், பிரதமரின் ஆலோசகர் ஆகிய பொறுப்புகளில் வரிசையாக உயர்ந்தார். 1991 ஆம் ஆண்டு நிதி அமைச்சர் ஆனார். 2004 ஆம் ஆண்டு இவரை பிரதமராகவே ஆக்கியது காங்கிரஸ் கட்சி. இவை அனைத்தும் அவரது கல்வி, பொருளாதார மேதமையால் கிடைத்த பதவிகளே தவிர அரசியலால் கிடைத்தவை அல்ல. இதற்கு முன்னுதாரணம் இல்லை.**

அவரும் தனது பதவிக்காலத்தில் கல்வியாளர், பொருளாதார அறிஞர், சிந்தனையாளராகவே நடந்தும் கொண்டார். அத்தகைய திட்டங்களுக்கே முன்னுரிமை கொடுத்துச் செயல்படுத்தினார்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டமானது 2005 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. கோடிக்கணக்கான கிராமப்புற மக்களுக்கு 100 நாட்கள் ஊதியத்துடன் கூடிய வேலை கிடைத்தது. ஏப்ரல் 2008 இல், இந்தத் திட்டம் 'மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம்' (MGNREGA) என பெயர் மாற்றப்பட்டது. இன்று வரை கோடிக்கணக்கானவர்களின் வாழ்வாதாரத்தை உறுதி செய்து வருகிறது.

அவரது ஆட்சியில் ஏராளமான சட்டங்கள் கொண்டு வரப்பட்டன. மகளிருக்கு எதிரான வன்செயல்களைத் தடுக்க 2005-இல் சட்டம், தகவல் அறியும் சட்டம், 6 முதல் 14 வயதுடைய அனைவருக்கும் கல்வி பெறும் உரிமைச் சட்டம், உணவுப் பாதுகாப்புச் சட்டம், லோக்பால் அமைப்புச் சட்டம், வன உரிமைகள் அங்கீகரிப்புச் சட்டம், நிலம் கையகப்படுத்தப்பட்டால், நியாயமான இழப்பீடு வழங்கச் சட்டம், கையால் மலம் அள்ளுவதைத் தடை செய்யும் சட்டம், மறுவாழ்வுத் திட்டம் 2012 ஆகியவற்றைக் கொண்டு வந்தவர் மன்மோகன் சிங் அவர்கள்.

**மகளிர் இட ஒதுக்கீடு மசோதா மாநிலங்களவையில் அவரது ஆட்சியில்தான் நிறைவேறியது. 11-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் 8 புதிய ஐ.ஐ.டி.-கள், 7 ஐ.ஐ.எம்.-கள், 30 மத்திய பல்கலைக்கழகங்களைக் கொண்டுவரத் திட்டம் தீட்டியவரும் அவரே. உணவு தானிய உற்பத்தியை அதிகரித்தார். 140 கோடி மக்களுக்கு ஆதார் அட்டைகளை வழங்கினார். வாஜ்பாய் அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட 'தங்க நாற்கரச் சாலை' மற்றும் 'நெடுஞ்சாலை நவீனமயமாக்கல்' திட்டத்தை மன்மோகன் சிங் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு தொடர்ந்தது. 'சிறப்புப் பொருளாதார மண்டல (SEZ) சட்டம் - 2005' கொண்டு வந்தார்.**

1991-96ஆம் ஆண்டுகளில் இந்திய நாட்டின் நிதி அமைச்சராக இருந்த அவர், 2004-14 ஆகிய பத்து ஆண்டுகளில் இந்திய நாட்டின் பிரதமராக இருந்தார். "யாருடைய சிந்தனையையும் யாரும் தடுக்க முடியாது. உலகின் ஒரு பொருளாதார சக்தியாக இந்தியா உருவாகுவதையும் யாராலும் தடுக்க முடியாது" என்று சொல்லிவிட்டு நாடாளுமன்றத்தில் தனது உரையை 1991 ஆம் ஆண்டு தொடங்கினார் மன்மோகன். அதனைத் தனது பதவிக் காலத்தில் நிறைவேற்றிக் காட்டினார்.

மன்மோகன் சிங், முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரத்துடன் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கைகளால் இந்தியப் பொருளாதாரம் 8-9 விழுக்காடு பொருளாதார வளர்ச்சி விகிதத்தை அடைந்தது. 2007 இல், இந்தியா அதன் அதிகபட்ச ஜி.டி.பி. வளர்ச்சி விகிதமான 9 விழுக்காட்டை அடைந்தது. உலகின் இரண்டாவது வேகமாக வளரும் பெரிய பொருளாதார நாடாக இந்தியா மாறியது.

'கொரோனா' காலத்தில் மோடி அரசாங்கம் மக்களைக் கைவிட்டபோது, "முதலாவதாக, அரசாங்கம் மக்களின் வாழ்வாதாரங்களை உறுதி செய்து, பாதுகாப்பு நிலையை உறுதி செய்வதுடன், கணிசமான நேரடி ரொக்க உதவி அளிப்பதன்மூலம் அவர்களுக்குச் செலவழிக்கும் சக்தியை அளிக்க வேண்டும்" என்று அறிவுரை சொன்னவர் மன்மோகன் சிங். "அரசின் ஆதரவுடன் கூடிய கடன் உத்தரவாதத் திட்டங்கள்' மூலம் தொழில் துறைக்கு போதிய மூலதனம் கிடைக்கச் செய்ய வேண்டும்" என்றும் கூறினார். "மனிதாபிமான நெருக்கடியால் பொருளாதாரத் தேக்கம் ஏற்படுகிறது. வெறுமனே பொருளாதார எண்கள் மற்றும் நடைமுறைகளின் அடிப்படையில் பார்க்காமல், நமது சமூகத்தின் எண்ணங்களின் அடிப்படையிலும் பிரச்சினையைப் பார்க்க வேண்டும்" என்றும் சொன்னார்.

தனது பதவிக் காலத்தில் நாடாளுமன்ற நடவடிக்கைகளில் தொடர்ந்து பங்கெடுத்தார். அனைத்து விவாதங்களிலும் கலந்து கொண்டு பதில்கள் அளித்தார். வயது முதிர்ந்த நிலையில் சக்கர நாற்காலியிலும் மாநிலங்களவைக்கு வந்தார். இறுதி வரையும் நாட்டுக்காகவும், மக்களுக்காகவும் தனது சிந்தனைப்படி உண்மையாகப் பணியாற்றினார்.

**இவை அனைத்துக்கும் மேலாக தமிழ்நாட்டு வரலாற்றில் மன்மோகன் சிங்குக்கு தனியிடம் உண்டு. தமிழ்மொழிக்கு செம்மொழித் தகுதியை ஏற்படுத்தித் தர வேண்டும் என்பது நூற்றாண்டுக் கனவு ஆகும். தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று 2004 ஆம் ஆண்டு தமிழைச் செம்மொழியாக ஒன்றிய அமைச்சரவையில் தீர்மானமாக அறிவித்தவர் பிரதமர் மன்மோகன் சிங். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் 18.08.2007 அன்று சென்னையில் தொடங்கி வைக்கப்பட்டது. சேதுசமுத்திரத் திட்டம் இன்று நிறுத்தி வைக்கப்பட்டாலும், அதனைத் தொடங்கி வைத்தவரும் அவர் தான். பேரறிஞர் அண்ணா கனவுத் திட்டம் அது.**

2004-14 ஆகிய ஆண்டுகளில் ஏராளமான திட்டங்கள் தமிழ்நாட்டுக்கு கொண்டுவரப்பட்டன. இவை அனைத்தின் மூலமாக காலம் தோறும் நினைவுகூரப்படுவார் டாக்டர் மன்மோகன் சிங்.





புதுடெல்லியில், மறைந்த முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் அவர்களின் உடலுக்கு, நாடாளுமன்ற காங்கிரஸ் குழுத் தலைவரும், அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவருமான திருமதி சோனியா காந்தி, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி ஆகியோர் அஞ்சலி செலுத்திய போது எடுத்த படம்!

## மலைவாழ் மக்களுக்கு மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில்

# 'திராவிட மாடல்' ஆட்சியில் ஏராளமான திட்டங்கள்!

### மலைவாழ் மக்களின் பயன்பாட்டிற்கு இருசக்கர அவசரகால ஊர்தி சேவையை தொடங்கி வைத்து அமைச்சர் எ.வ.வேலு தகவல்!

**திருவண்ணாமலை, டிச.28- "மக்களைக் காப்பாற்றக் கூடிய பணியில் மக்கள் நல்வாழ்வுத்துறை சிறப்பாகச் செயல்படுகிறது" என்று அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் பாராட்டுத் தெரிவித்தார்.**

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, மருத்துவம் மற்றும் மக்கள்நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (26.12.2024) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பாக ஜமுனாமரத்தூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் புதிய மருத்துவ கட்டிடங்களை பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், குழும இயக்குநர், தேசிய நலவாழ்வு குழுமம் திட்ட இயக்குநர், தமிழ்நாடு சுகாதார சீரமைப்பு திட்டம் மரு. அருண் தம்புராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி.என்.அண்ணாதுரை (திருவண்ணாமலை), எம்.எஸ்.தரணிவேந்தன் (ஆரணி), சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி (செங்கம்), எஸ்.அம்பேத்குமார் (வந்தவாசி), பெ.சு.தி.சரவணன் (கலசப்பாக்கம்), ஓ.ஜோதி (செய்யாறு),மாநில தடகளச் சங்கத் துணைத்தலைவர் மரு. எ.வ.வே.கம்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களும், மருத்துவம் மற்றும் மக்கள்நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பாக ரூ.1.60 கோடி மதிப்பீட்டில் போக்குவரத்து வசதியற்ற மலை கிராமப் பகுதிகளில் வாழும் பழங்குடியினர் மற்றும் இதர மக்களின் அவசர மருத்துவ சேவைகளுக்காக 25 இருசக்கர அவசரகால மருத்துவ வாகனங்கள் (Bike Ambulance) சேவையை தொடங்கி வைத்தும், ரூ.14 இலட்சம் மதிப்பீட்டில் பழங்குடியினர் நலவாழ்வை மேம்படுத்தும் வகையில் மலைவாழ் பகுதிகளில் செயல்பாட்டில் உள்ள 20 நடமாடும் மருத்துவ வாகனங்களுக்கு (MMU) இரத்த பரிசோதனைகளுக்கான பகுப்பாய்வு கருவிகள் (SemiAuto Analyzer) வழங்கினார்கள்.

தொடர்ந்து, 15-வது நிதிக்குழுவின் கீழ் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பாக ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் கலசபாக்கம் ஊராட்சி ஒன்றியம், அத்திப்பட்டு ஊராட்சியில் துணை சுகாதார நிலையம், அரியூர் ஊராட்சியில் ரூ. 1.20 கோடி மதிப்பீட்டில் ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடமும், தௌ;ளார் ஊராட்சியில் ரூ. 50 இலட்சம் மதிப்பீட்டில் வட்டார பொது சுகாதார அலகு நிலைய கட்டிடம், தச்சூர் ஊராட்சியில் ரூ. 50 இலட்சம் மதிப்பீட்டில் வட்டார பொது சுகாதார அலகு நிலைய கட்டிடம், நெடுங்குணம் ஊராட்சியில் ரூ. 35 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டிடம்,

அத்திப்பட்டு ஊராட்சியில் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டிடம், சௌந்தர்யபுரம் ஊராட்சியில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டிடம், கீழ்நர்மா ஊராட்சியில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டிடம், கொம்மனந்தல் ஊராட்சியில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் வட்டார பொது சுகாதார அலகு நிலைய கட்டிடமும், சிறுகட்டூர் ஊராட்சியில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டிடங்கள் என மொத்தம் 09 புதிய கட்டிடங்களை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்கள்.



பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு அவர்கள் சிறப்புரையாற்றியதாவது :-

ஜமுனாமரத்தூர் ஊராட்சி ஒன்றியப்பகுதியில் இருசக்கர அவசர கால ஊர்தி, புதிய கட்டிடங்களை திறந்து வைக்கின்ற நிகழ்வு சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத் துறை, கூட்டுறவுத்துறை, சமூக நலத்துறை உள்ளிட்ட 7 துறைகளின் சார்பாக 395 பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்குகின்ற நிகழ்வாக நடைபெற்று கொண்டிருக்கின்றது. மேலும் அவசர கால ஊர்தி என்று அழைக்கின்ற 108 என்ற வாகனம் முத்தமிழறிஞர் கலைஞர்கள் அவர்கள் ஆட்சியில் தான் செயல்படுத்தப்பட்டது. அவர்களின் வழியில் ஆட்சி நடத்திக்கொண்டிருக்கின்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 108 அவசர கால ஊர்தி செல்ல முடியாத மலை வாழிடங்களில் இருசக்கர அவசர கால ஊர்தி வடிவமைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமில்லாமல் போளூர், பரமனந்தல், ஆலங்காயம் வழியாக தார் சாலைகள், மலைப் பகுதியில் மின்சாரம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் அனைத்து கிராமங்களிலும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் தொட்டி, பேருந்து வசதி என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் தான் கொண்டுவரப்பட்டது.

மலைவாழ் மகளிர்களுக்கு கட்டணமில்லா விடியல் பேருந்து பயணம், 2023 நிதி நிலை அறிக்கையில் வனத் துறை அனுமதியுடன் 77 கி.மீ மலைப்பாதைகள் அமைக்க சட்டப்பேரவையில் அறிவித்ததோடு மட்டுமில்லாமல், அரசாணை 116ன் கீழ் ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு, இந்த மலைப்பாதைகளில் 371 சிறுபாலங்களும், 25 சிறிய மற்றும் பெரிய பாலங்கள் கட்டுவதற்கும், 26 கொண்டை ஊசி வளைவுகள் மேம்படுத்த வேண்டும்.

மண்ணின் உறுதித்தன்மையை தக்க வைப்பதற்காக 45 இடங்களில் தடுப்புச் சுவர் கட்ட வேண்டும். 24 இடங்களில் அணைப்புச் சுவர், 22 இடங்களில் வடிகால் அமைக்க வேண்டும் என்ற அடிப்படையில் ரூ. 205 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆகவே, மலைக்கு சாலை முக்கியம் மற்றும் உயிர் வாழ்வதற்கு மருத்துவ வசதி தேவை. முதலமைச்சர் அவர்கள் உலகத்தில் இல்லாத வகையில் மக்களைத் தேடி, மருத்துவம் என்ற சிறப்பான திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். நாம் மருத்துவரை அணுகி காத்திருந்த நாட்கள்; சென்று, மக்களின் வீடு தேடிச் சென்று மருந்து மாத்திரைகளை கொடுக்கின்ற நிலையை உருவாக்கியிருக்கிறார்கள் என்றால் திராவிட மாடல் ஆட்சி நடத்துகின்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். மருத்துவம் மற்றும் மக்கள்நல்வாழ்வுத்துறை சார்பாக திருவண்ணாமலை மாவட்டத்தில் பல்வேறு திட்டப் பணிகளை செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். 24 மணி நேரமும் இயங்கி கொண்டிருக்கின்ற துறை என்றால் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை ஆகும். ஒரு ஆட்சி சரியாக இருந்தால் தான் மக்களை காப்பாற்ற முடியும்.

**அமைச்சர் மா.சுப்பிரமணியனுக்கு பாராட்டு!**

அவ்வாறு மக்களை காப்பாற்றக்கூடிய பணியில் மக்கள்நல்வாழ்வுத்துறை சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது என் மனதார வாழ்த்துகிறேன். மலைகளின் அரசி ஊட்டி என்று குறிப்பிடுவார்கள். ஆனால் ஒரு அரசு மாநில அளவில் திட்டத்தை நிறைவேற்றுகிறதற்கு தேர்வு செய்கின்ற இடமாக ஜமுனாமரத்தூர் மலைப்பகுதியை தேர்ந்தெடுத்தமைக்கு நான் பாராட்டுகிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் அளித்த கோரிக்கைகளை மருத்துவம் மற்றும் மக்கள்நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கட்டாயமாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் ஆட்சி நடத்துகின்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஜமுனாமரத்தூர் பகுதியில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியிருக்கிறார்கள். அவைகளை நிறைவேற்று வதற்கு அமைச்சர் பெருமக்கள் பெரும் உதவியாக இருக்கின்றார்கள். அந்தவகையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் இந்த மலைப்பகுதிக்கு பல்வேறு பணிகளை செய்துகொண்டிருக்கிறதற்காக மாவட்ட மக்கள் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.12.2024) சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 5 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் "மக்களைத்தேடி மருத்துவம்" திட்டத்தின் கீழ் பொதுமக்களுக்கு பரிசோதனை மேற்கொள்வதற்காக உதயநிதி ஸ்டாலின் அறக்கட்டளையின் மூலம் 15 இரத்த அழுத்த பரிசோதனை கருவிகளை மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவ பணியாளர்களிடம் வழங்கினார்.